**Rates**
*Inland Subscription*:
Rs. 6 per year. (including postage)
Single copy: 15 cts. (including postage)
*Advertisement*: On application.
*'In Memoriam'*: (within 4 inches) Rs. 7-50 per insertion.
*'Order Nisi'*: Rs. 5 per insertion

# THE MORNING STAR

Registered as a Newspaper ( Established 1841 ) Published every Friday

VOL. 105 | JAFFNA, FRIDAY, DECEMBER 14, 1945. | NO. 49.

**Notice**
Please send all editorial correspondence as well as all business matters to Tellippalai. This will ensure prompt attention.


JAN 2 ... VADDUKODDAI, CEYLON.

RIGHTEOUSNESS EXALTETH A NATION, BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.

## OURSELVES

**Owing to the Christmas and New Year Holidays, there will be no issue of the "Morning Star" on the 21st and 28th of this month.**

**Our next issue for the New Year will be on the 4th of January.**

## NEWS

### LOCAL

#### Teachers' Camp

A Teachers' Camp organised by Miss L. G. Bookwalter, Manager of Jaffna College Affiliated Schools, commences tomorrow evening at the Uduvil Girls' English School. The subjects to be discussed at the Camp will be of religious and educational value. Mr. K. S. Arulnandhy, Principal of the Govt. Training College, Colombo and Mr. K. Nesiah of St. Thomas' College are among the leaders of the Camp which is intended to provide both recreation and instruction.

#### Sinhalese and Tamil Speeches in State Council

It is undetstood that the Standing Order of the Council will be amended in the course of the first sessions next year to permit members to speak in either of these languages with the permission of the Speaker. Shorthand writers in Sinhalese and Tamil are being trained for the purpose with the aid of text books which have recently been published but the question whether interpreters will have to be engaged has not yet been considered.

#### The Law Society of Ceylon

The monthly meeting of the council of the Law Society of Ceylon was held at Trinity Place, Hultsdorf on Saturday 8th inst. The President Mr. S. J. C. Kadirgamar, presided.

Members from Colombo, Hatton, Negombo, Gampaha, Kegalle, Chilaw, Kalutara and Balapitiya were present.

Among the matters discussed and decided upon were the following Financial Statement, Budget for 1916, Incorporation. Recommendation of Proctors for Apprenticeship, Panel of the Council of Legal Education, Attorney General's Circular to Crown Proctors. Adoption by the State Council of the Motion of Mr. H. de Z. Siriwardene M. S. C., and member of the Council of the Law Society, re-appointment of Masters in Chambers.

#### "Communalism and the New Constitution"

The above was the subject of the "Ramanathan Memorial Lecture" delivered by Dr W. Ivor Jennings M. A. L. L. D., Vice-Chancellor, Ceylon University, at the Parameswara College Hall', last Saturday. Mr. A. Mahadeva, Minister of Home Affairs, presided. Tracing the causes of Communalism in Ceylon, Dr. Jennings said that they were due more to linguistic causes than to racial differences, He emphasised the necessity of Ceylon having one language if communalism were to be rooted out. He was of opinion that Communalism under the new Constitution would fast disappear because it would compel the people to form parties not on communal lines but on economic lines. This device on the part of the Soulbury Commissioners was not all accidental, but international. Mr. S. Natesan M. S. C. proposed a vote of thanks.

#### Personal

Mr. T. S. Cooke Jayaratnam, Chief Secretary of the Central Province of India, has been appointed Adviser to the Governor of the Central Provinces in succession to Sir Geofrey Burton.

#### Wedding

The marriage took place at St Paul's Church, Kynsey Road, last Saturday of Dr. Milroy Paul, Professor of Surgery, Ceylon University and Visiting Surgeon of the General Hospital, Colombo and Miss Irma Maheswari Philips, daughter of Mr. and Mrs. F. Thampoe Philips, Revd. Basil Jeyawardena officiated. The bride who was given away by her father was attended by Misses Cynthia Philips and Rukmani Rajasingham as bridesmaids, Mr. Robert Paul was the bestman.

—The marriage was solemnised at St. Mary's Cathedral, Jaffna on the 29th ultimo of Mr. X. M. Sellathambo, D. R. O. Mantai and Miss Mary Josephine Thangamalar, daughter of the late Mr. M. T. Joseph Health Officer, Jaffna. Revd. Fr. J. Emilianuspillai officiated assisted by Fr. O. A. Gurusamy and Fr. L. A. Singarayar. A well attended reception was held at the bride's residence "Dr. Thambimuttu Vasa" at which the toast of the bride and bridegroom was proposed by Mr. C. Coomaraswamy, Government Agent N. P., supported by Adigar A. Naganather. The bridegroom replied thanks. Mr James Rasiah, the uncle of the bride, thanked all the guests for their presence in large numbers.

#### Obituary

We are sorry to record the death which occurred on the 2nd inst of Mr. P. V. Vythilingam, who was for some time a preacher under the J. C. S. I. U. C. and later a teacher under the Jaffna Council of the South India United Church, He is the son-in-law of the late Rev. Veerakathippillai. The funeral service was conducted by Rev. A. C. Thambirajah, assisted by Rev. E. T. Williams and Rev. J. V. J. Arnold. He leaves behind besides his wife, three daughters, one son and a host of relations to bemoan his loss.

### INDIAN

The Andhra University at its annual convocation held recently awarded Prof. S. Chandrasekhar, F. R. S. *in absentia* the Sir C. R. Reddi National Prize for 1945 which is given to a Scientist of international reputation. Prof. Chandrasekhar is the second recipient, the first being his own uncle, Sir C. V. Raman.

—A group of Chinese professors, on their way to England saw Gandhiji for the first time at Sodepore Ashram, Calcutta. About 4000 railway tickets are now being collected everyday at Sodepore Station. The prayer meetings are attended by a good sprinkling of Americans, Chinese and other nationals. Mahatma Gandhi is expected to pay a visit to the residence of Subhas Chandra Bose and also to the residence of Mr. Sarat Chandra Bose during his present stay in Calcutta

### FOREIGN

The Foreign Secretaries of the United States, Britain and Russia will meet in Moscow on December 15 to tackle and array all critical and international issues including the control of atomic energy.


**FOR SALE**

Remington Portable Typewriter Model No. 5, almost new.

V. R. TambyRaja,
'Jane Augusta,'
3rd Cross Street, Jaffna.
49—1

THE
**JAFFNA FORAGE STORE**
(FORAGE SPECIALISTS)
MAIN STREET, JAFFNA.

Best Quality Forage at reduced prices.

| | |
|---|---|
| more milk mixture 100 lbs. | Rs. 21.50 |
| do do ,, | Rs. 19.50 |
| do Goats Food ,, | Rs. 21.50 |
| Bull Mixtures ,, | Rs. 20.50 |
| Poultry Mash for Layers in 4 lbs. bag | Rs. 1.20 |
| Chicken Grains in 5 lbs. bag | Rs. 2.00 |

The abobe Mixtures and Poultry Food can be had from our Sole Agents.

Messrs. The Nadana Vilas,
Kangesanturai Road,
Grand Bazaar, Jaffna.

or direct from us, PROPRIETOR.

# X'MAS & NEW YEAR SALE

(from December 15th to January 5th)

AS IT HAS BEEN DECIDED TO RE-OPEN OUR BUSINESS IN COLOMBO, WHICH WAS CLOSED DURING THE RAIDS 1942, WE TAKE THIS OPPORTUNITY TO OFFER OUR CUSTOMERS THE ENTIRE STOCK OF COTTON, SILK, BENARES AND KASHMIRE SAREES ETC., AT NEARLY COST PRICE.

**Don't forget!**

Silk and Benares Sarees are controlled and our new stocks have been recently price-marked.

The rates marked are already from Rs. 50-00 to Rs. 100-00, lower on each Saree than the others in the market, as unlike most we import goods without overloading its prices on the invoices in India.

Yet for all that, we offer you all these stocks during our sale at very much below the marked controlled Prices.

**Remember!**

We also have exclusive designs in Printed Kashmire Silk Sarees.

These are usually Price-marked at Rs. 170-37 and Rs. 144-54. But our latest stocks have just arrived from India and we now offer you all these at Rs. 117-63 each nett.

**Traders Please!**

Traders wanting to make purchases from us shall be offered goods at actual cost, i. e. 33⅓ per cent less on Silk sarees etc. and 15 per cent less on cotton materials.

**COUPON FREE MATERIALS:**

| | |
|---|---|
| 100 per cent woolen black serge best for coats for lawyers and advocates, as well as suitable for blankets; 54 inches wide, | Rs. 18—50 a yard. |
| 100 per cent woolen tweed (grey) 62 inches wide | Rs. 36—00 a yard. |
| White finest quality net for veils 54 inches wide | Rs 12—50 a yard. |
| 'Prince of wales' checked shirting 36 inches | Rs. 10—50 a yard. |
| Fancy designed Gent's cotton stockings | Rs. 2—87 a pair. |
| Fancy coloured cotton socks | Rs 3—44 a pair. |
| 'Allwool' English make full size socks | Rs. 3—00 a pair. |
| 'Utility' English make fancy socks | Rs. 2—50 a pair. |
| Ladies' cotton hankies (coloured) | Cts. —43 each. |
| Bibs for babies | Cts. —47 each. |
| Ladies' white cotton stockings (best for nurses and sisters) | Rs. 2—14 a pair. |
| Ladies' coloured mercerised stockings | Rs. 2—49 a pair. |
| Ladies' silk stockings (fully fashioned) | Rs. 7—50 a pair. |
| Silver thread for embroidery (very fine) | Rs. 4—00 an ounce. |

**We also stock a variety of American Textiles:**

Plain, Printed and checked designed dress and blouse materials.
Twills, poplins etc., for shirting.
Voils, cambrics, longcloth etc., etc.

(All with coupons and subject to 5 per cent & 10 per cent discounts to the purchaser of Rs. 50—00 and over Rs. 100—00 worth goods at a time.)

**NOVELTY SILK STORE,**
Main Street, Jaffna.

# FIBRO ENGLISH SUITINGS

**IN THREE SHADES**
( NO COUPONS )

BUCKINGHAM MILLS

**WHITE DRILL Rs. 1—21 per yard**
(One point)

**GREY DRILL Cts. 91 per yard**
(One point)

**S. P. VICTORIA & SONS,**
**67, MAIN STREET, JAFFNA.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும்; பாவமோ எந்தச்சனங்களுக்கும் இகழ்ச்சி.

## புதினக் குறிப்புகள்

காலநிலை

சோனுமாரியாய்ப் பொழிந்த அளவு மழை வருஷித்தபின் தற்போது வெளிப்பா யிருக்கின்றது. சாடையாகப் பனி புகட்டு வதுபோலிருக்கின்றது. பொதுவாகச் சனங்களுடைய சுகசேமாதி நன்முயிருப்பது சந்தோஷமே.

தமிழர் சிங்களரோடு ஒத்துழைக்கவேண்டும்

சென்ற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண ககரசபை மண்டபத்திலே தமிழர் கூடியிருந்தவோர் பிரசித்தமான கூட்டத்திலே இராம கிருஷ்ணமிஷனின் தலைவரான சுவாமி விபுலானந்தர் பேச்சாளரொருவராயிருந்தார். இலங்கையின் சாதாரணகவியிலுள்ள தமிழ்மக்களை விளித்து, அவர்கள் உள்ளங்களில் கிளர்ச்சியை உண்டாக்கத்தக்கதாக அவர் சொன்னதென்னவெனில்: தமிழ்மக்கள் அசதியான தங்கள் நித்திரையினின்று விழித்தெழுந்து, சுயாதீனத்தைத் தங்கள் குறிக்கோளாகக்கொண்ட சிங்களரோடு ஐக்கியப்பட்டு, சாதிக்தவ விநிலையை அடைய அவர்கள் செய்யும் முயற்சியில் தமிழ்மக்களுஞ் சேர்ந்துகொள்ள வேண்டுமென்பதே.

தமிம் புயல்

திரிகோணமலைக்கு 200 அல்லது 300 கட்டைத் தூரப் புயல்கொஞ்சநேரம் கிலையாய் நின்று வீசியது. 6 மணித்தியாலந்து பிற்பகல் கப்பல்களெல்லாம் கொழும்புத் துறைமுகத்திற் பவத்திரமாய் நின்றுகொண்டன.

இரண்டு லட்சம் ரூபாய்க் கொடை

இலங்கையிலுள்ளாரொருவர் 2 லட்சம் ரூபாயைப் பின்வரு செல்லப்படும் வண்ணம் கொடையாகக் கொடுத்திருக்கின்றார். 2 லட்சம் ரூபாயில், 50 000 ரூபாய் கொழும்பு அத்தியட்சருக்கும், 50,000 ரூபாய் கண்டியிலுள்ள Trinity கல்லூரிக்கும், 40,000 சிலாபத்திலுள்ள அத்தியட்சருக்கும், 20,000 ரூபாய் இக்கிரியாவிலுள்ள பிரசவ ஆஸ்பத்திரிக்கும், 15,000 ரூபாய் காலி அத்தியட்சருக்கும், 15,000 ரூபாய் முறட்டுவில் இரட்சணிய சேனையால் நடத்தப்படும் அநாதர் சாலைக்கும், 10 000 ரூபாய் முறட்டுவிலுள்ள சமூக ஊழியக் காரியக் கொம்மிற்றிக்குமாக 2 லட்சம் ரூபாய் உபகரிக்கப்பட்டிருக்கின்றது. நல் கோக்கங்களுக்காக மகத்தான கொடை.

சோனுமாரியாய் மழை

சென்ற 6 ம் திகதிக்கு முந்திய 24 மணித்தியாலங்களுக்குள் பாக்கனில் 10 அங்குல மழையும், யாழ்ப்பாணத்தில் 7.18 அங்குலமும், வவனியாவில் 5.87 அங்குலமும், திரிகோணமலையில் 3.96 அங்குலமும், மாத்தளையில் 3,90 அங்குல மழையும் பெய்திருக்கின்றது.

கோப்பிக்கொட்டை லாபத்துக்கு ரூபா 200 அபராதம்

கொழும்பு மாஜிஸ்திரேற் கோட்டிலே சேற்றைய தினம் சேனு. மானா. மகமது அபதுல் காதர் என்னும் வியாபாரி கோப்பிக்கொட்டை இருத்தல் விலை ரூபா 1.35 ஆயிருக்க, அவ்வியாபாரி இருத்தல் ரூபா 2,25 ஆய் விற்றதினால் ரூபா 200 அபராதமிடப்பட்டான்.

பிரதம மந்திரி அட்லியின் வெற்றி

தொழிற்கட்சியாரின் உள்நாட்டு விஷயங்கள் சரியாய் நடைபெறவில்லையென்றும், அதினால் தொழிற்கட்சி அரசாங்கத்துக்கு விரோதமாய்த் திரு. W. சேர்ச்சிலால் (Conservative Party) கொண்டுவரப்பட்ட Vote of Censure ஒப்பேறவில்லை. திரு அட்லி வெற்றிபெற்றார்.

நகர மண்டபத்தின்மீது துவசம்

ஓர் கட்சத்துடனே சிங்கம் நிற்கிற பாவனையான சின்னத்தையுடைய நிறு இலங்காவின் துவசம் இலங்கையிலுள்ள எல்லாச் சாதியாருக்கும் பொதுவானதும், சிங்களர், தமிழர், முஸ்லீம்களின் அரசரின் ஆளுகை காலத்திலே எல்லாராலும் பாவிக்கப்பட்டு வந்ததினாலும் 1946 ம் ஆண்டு ஜனவரி மாசம் முதற் திகதியோடு அத்துவசம் கொழும்பு நகரசங்க மண்டபத்தின்மீது உயர்த்தப்பட வேண்டுமென்ற பிரேரணை கொழும்பு முனிசிபல் சங்கத்திற் கொண்டுவரப்பட்டு அநுமதிக்கப்பட்டது. இந்த தர்க்கத்தின்பின் The Law and General Subjects Committee இன் ஆராய்ச்சிக்கு விடப்பட்டிருக்கின்றது.

மரணம்

முந்திய கந்தர்புரி மகா அத்தியட்சர் (Lord Lang) லாங் பிரபு தமது 81ம் வயதிற் காலமாயினர்.

மொஸ்கோவில் மூன்று வல்லரசுகள்

பிரித்தானியா, அமெரிக்கா, ருஷியா என்னும் வல்லரசுகளின் பிறதேச மந்திரிமார் மொஸ்கோ நகரிலே டிசெம்பர் மாசம் 15 ம் தேதியிலே ஓர் ஆலோசனைச் சபை கூடினர். ஆலோசனைக்கெடுத்துக்கொண்டப்படும் விஷயம் அணுப்பிரளய சம்பந்தமான இரகசியம் ஆம்.

காந்தி உவேவெலைச் சந்தித்தல்

சென்ற புதன்கிழமை பிற்பகல் 6-30 மணிக்கு கல்குத்தாவிலுள்ள அரசாங்க மாளிகையில் மகாத்மா காந்தியும் உவேவெல் பிரபுவும் சந்தித்தார்கள். பேச்சு முடிந்ததும் காந்தியடிகள் வெளியேறினார்கள். வடக்குப்பக்கத்துக் கதவண்டை காந்தி சென்று அவ்விடங்கூடி நின்ற திரள் கூட்டமான சனங்களுக்கு இரண்டொரு நல்வசனங்களைப் பேசினர். சனங்கள் ஆர்ப்பரிப்பு தமக்கு வயது சென்றநிலையில் தாங்கமுடியாத விஷயமாதலினுற் சனங்கள் சத்தம்போடுவது சரியல்லவென்றும், சனங்கள் கொடிப்பூர் ஆச்சிரமத்துக்குச் செபத்துக்கு வரும்போது, திரளானவர்கள் வந்தபோதிலும், ஒரு சத்தமுமில்லாமல் எல்லாம் அமைதியாயிருந்ததென்றுங் குறிப்பிட்டார்.

நிலம் மீட்புச் சட்டம்

1945 ம் ஆண்டு தை மீ 22 ம் திகதி தொடக்கமாக மேற்கூறிய சட்டம் Land Redemption Ordinance) அமுலுக்கு வந்திருக்கின்றது. இதுவரையில் Land Commissioner ஆகிய திரு. N E ஏணஸ்ற் என்பவரிடம் 5000 கேள்விப் பத்திரங்கள் வந்திருக்கின்றன. இவற்றில் மிகுதியான காணிகள் சில ஏக்கர் விசாலமுள்ளவைகள் மாத்திரம். இவைகள்தான் தற்போது எடுத்து ஆலோசிக்கப்படுகின்றன.

சனங்களுக்கிருக்குங் காணிகளை— தோட்ட நிலங்களையும், வீட்டு நிலங்களையும்—பெருந்தொகையான பணத்துக்கு ஈட்டுக்குக் கொடுத்தவர்களுக்கு உதவியாக அரசாங்கம் தற்போது தானே பணங்கொடுத்துக் குறித்த காணிகளை மீட்டுக்கொள்ளும். காணியை உடையவர்கள் அரசாங்கம் கொடுத்த பணத்தைத் தங்களுக்கு வசதியான முறையில் கொடுத்துத் தீர்த்துக் கொள்ளலாம். முழுப்பணங் கட்டியபின் காணி உடையவர்களுக்கு திருப்பிக் கொடுக்கப்படும். இது அரசாங்கத்தினுற் செய்யப்படும் மகாபெரிய தயவு எத்தனையோ ஏழைகளுடைய காணிகளும், பணமுடையராயிருந்து முறிந்துபோன அநேகருடைய காணிகளும் இந்தியாவில் ஆரத்சமுறிஞ்சிக் குடிக்கும் அட்டைகளென்படும் பாறவாடிகள் போன்ற பணக்காரர் கையிலுடையவை ஆக்கப்பட்டன. இச்சட்டம் ஏழைகளுக்கும், பணவிலையமாய் முறிந்துபோனவர்களுக்கும் பெரிய சகாயமாகும். இந்தச் சட்டத்தைப் பற்றிப் பலர் அறியமாட்டார்கள். இதைப்பற்றி படித்தவர்கள் அறியாதாருக்குத் தெரிவிப்பது பெரிய உதவியாகும்.

---

### கிறிஸ்து ஜனனகீதம்

"செந்தாமரை வதனத்தேனே" என்றபடி

கண்ணிகள்

1\. வெல்லேமலை மேலுநிந்தார்—சோனே
சேதனியில் ஆனந்தமே தானே
வல்லமைநற்தேவன் மனுவடிவா—

2 தேவ மங்கையாவுந் தறந்து
சிரும யரியிடமே பிறந்து
தேவியாளோ அதிசயனேசே—

3 ஆனடைகுடி விண்மீதில்
ஆதிபரன் வந்திருந்தபோது
தேவ கணங்கூட — திவ்யகானம்
பாட—

4\. எல்லாச் சனத்திருக்குஞ் சந்தோஷம்
யேசுராஜன் வந்த சமாச்சாரம்
அல்லேலூயா ஆமென்
அல்லேலூயா ஆமென்.

S. J.

---

### பக்தி

சமது சீவியத்தின் எல்லா விடயங்களிலும் பிரதானமாகத் தோன்ற வேண்டிய ஓர் அம்சம் பக்தி என்பது. நன்மைகளின் ஊற்றாக ஆண்டவர் காணப்பட்டபோது அவருடைய அன்பரானவர்க்கும் அவர் மேல் உண்டானது பக்தியே.

பாடசாலையில் இருக்கும் நாம் எல்லோரும் படிக்கிற உண்மைகளைக் கடைப்பிடிக்க... பாடத்திற்... ளாக இருக்கின்றோம். முதல்படித்த பாடத்தில் உண்டாகிய ஆர்வம், அடுத்த பாடத்தை இலகுவாகப் படிக்கச் செய்யும்போது பாடத்தில் தோன்றியுள்ளது பக்தியே.

வளர்ச்சிக்குப் பக்தி தேவையானதொன்று. "செய்யுங்கள் அப்போ கூடிய வெளிச்சம் உண்டாகும்" என்று ஆண்டவர் கூறினர். அறிந்த அளவுக்கு ஒருவன் ஒன்றைச் செய்தால் அது அவனுக்கு அடுத்ததை நன்கு செய்ய வழிகாட்டும். இதுவே நமது புதுமுறைக் கல்வியின் முக்கிய அம்சம்.

பாடசாலையின் நோக்கங்களில் பிரதானமானது நன்மையானவைகளுடன் பழகவும், அதன்படி வாழ வழிகாட்டுவதுமாகும். நன்மையானவைகளில் நித்தியமானவைகளில் பக்தியாக இருப்பின், நமது சீவிய சந்தர்ப்பங்களை ஆட்சிப்படுத்துவது இலகு.

சீவியப் பிரச்சினைகளை அவ்வவ் நேரத்தில் ஆட்சிப்படுத்தத் தெண்டிப்பவனுக்கும், நித்தியமான நன்மையானவைகளில் பக்தியுடையவனாக இருந்து அவைகளைக்கொண்டு சீவியப் பிரச்சினைகளை விடுவிப்பவனுக்கும் அதிக வித்தியாசமுண்டு. முந்தியவனுடைய சீவியம் நித்திய போராட்டமுடையதாக இருக்கும். மற்றையவனுக்கோ சீவியம் அழகும் ஐசுவரியமும் உடையதாகும்.

உதாரணமாகக் குடிப்பதில்லை எனத் தீர்த்துக்கொண்டவனுக்கோ மனதில் தொந்தரவில்லை. மற்றவனுக்கு அதிக தொந்தரவுண்டு. நாம் நித்திய பொருள்களாக, பக்திக்குரிய பொருள்களாகச் சிலவற்றை வைத்திருப்பின் மேலான ஒழுக்க சீவியத்தை நடத்துவது இலகுவாகும். பக்திக்குரியவைகளைக்கொண்டு தீர்ப்பவனுடைய சீவியம் அழகும் ஐசுவரியமும் உடையதாகவும் மற்றையவனுடைய சீவியம் அதிகம் பஞ்சப்பட்டதாகவும் இருக்கும்.

பூர்வ கிரேக்கர் நன்மை, உண்மை, அழகு என்பவற்றில் பக்தியுடையவர்களாக இருந்து, தமது சீவியத்தை ஐசுவரியப்படுத்தினர். அதுபோலவே நாமும் மேலானவைகளில் ஐசுவரியமுடையவைகளில் பக்தியுடையோராக இருந்து, அவைகள் எங்களை ஆள விடவேண்டும். அப்போதான் வளர்ச்சிக்கு இடமுண்டு. மேலான நிலை உண்டு.

பா. சிவலிங்கம்,
ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.


THE SHOP FOR THE BEST BOOKS

Just arrived Fresh Stocks of X'mas and New Year Cards
Books suitable for Sunday Schools presentation
and a wide selection of Christian Readings.

THE C. L. S. BOOK SHOP,
First Cross Street, Jaffna

PLACE YOUR ORDERS NOW FOR
"DRAVIDA"
A History of the Dravidian Race from Mohenjo - Daro period to the British period — WITH MAPS AND ILLUSTRATIONS
BY E. L. TAMBIMUTTU.
FOREWORD By K. A. NILAKANTA SASTRI, M. A.,
Professor of Archaelogy and History, Madras University.
Rs. 4—00 PER COPY. Postage Cts. 25.
"THE CASTES, CUSTOMS, MANNERS & LITERATURE OF THE TAMILS"
By SIMON CASIE CHITTY.
Re. 1—00 per copy. Postage Cts. 25.
"OUR PLACE IN THE CIVILIZATION OF THE ANCIENT WORLD"
By K. BALASINGAM.
Reduced Price Cts. 65. Postage Cts. 12.
COLOMBO BOOK CENTRE
General Publishers Ltd., 20, Parson's Road, P. O. Box 305, Colombo.

70 வருஷங்களுக்கு மேற்பட்ட அனுபவம் ...



1872 ம் ஆண்டுக்கு முன் இங்கிலாந்திலே முதல் ஹம்பர் துவிச்சக்கரம் செய்யப்பட்டது. ஹம்பர் துவிச்சக்கரத்தில் இறப்பட்ட வரிகளும், பெலனும், இலேசும் இன்று அதனுடைய நீண்ட அனுபவத்தையும் அதி செய்கை பண்ணப்பட்ட திறமையையும் காட்டுகின்றது.

ஹம்பர் துவிச்சக்கரத்தின் வரத்து மட்டுப்படுத்தப்பட்டாலும் அதற்குத் தேவையான மறுபகுதிகள் கிடைப்பதனுல் ஹம்பர் துவிச்சக்கரத்தை யுடையோர் தொந்தரவு இல்லாமல் அதைப் பாவிக்கலாம்.

ஹம்பர்

ஹம்பர் லிமிடெட், ஹம்பர் துவிச்சக்கரவஜண்டுகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிமல்குக அன்பு பெருகுக
தேசமெங்கனுந் தீமையருகுக
பாசகேக்கப் பக்திமேயருள்
யேசு நாமமே என்றென்று மோங்கவே

உதயதாரகை

1945ம் ஞு டிசெம்பர் மீ 14 உ

## மேசியா

மேசியா என்பது எபிரேயபதம். அபிஷேகிக்கப்பட்டவரென்பது அப்பதத்தின் அர்த்தமாகும். அதற்குச் சமமான கிரேக்கு பதம் "கிறிஸ்து" என்பது, அதின் அர்த்தமும் "அபிஷேகிக்கப்பட்டவர்" என்பதுதான். ஆகவே மேசியா என்பதும் கிறிஸ்து என்பதும் ஒரே கருத்துள்ள இரு சொற்கள். இஸ்ரவேல் சனங்களுக்குள்ளே "மேசியா" என்பது மகா கருத்துள்ள பதம். அச்சாதியினுடைய சாதித்துவ நம்பிக்கையெல்லாம் அந்த ஒரு பதத்திலே தொங்கியிருக்கின்றது.

உலகத்திலே யூதர், கிரேக்கர், ஜர்மனியர், அராபியரெனப் பலசாதிகளுண்டு. ஆனால் இந்த யூதரைப் போல அதிக பாடுகளையும், கஷ்டங்களையும், நெருக்கிடைகளையும், எதிரிடைகளையும், அழிவுகளையும் பெற்ற வேறொரு சாதி கிடையாது. கடைசியான பாரித்த யுத்தந் தொடங்கிய காலத்திலே ஜர்மனியரிடமிருந்து யூதர்கள் பட்ட பாடுகளைக் குறித்து வாசித்திருக்கின்றோம். பலஸ்தீனாவிலேதானும் அவர்கள் அடைந்த கஷ்டங்களைச் சரித்திரவாயிலாக அறிந்திருக்கின்றோம். யூதருடைய புஸ்தகமாகிய பழைய ஏற்பாட்டிலேயே யூதருக்கு எல்லாச்சாதிகளும் விரோதிகளாயிருந்த விஷயம் நமக்குத் தெரியுமே. யேசுகிறிஸ்துவின் காலத்திலும் யூதர்கள் தவித்துக்கொண்டிருந்தனர். எக்கஷ்டத்தினூடேயும் அவர்கள் தங்கள் கண்களை மேலே ஏறெடுத்து, மேசியா வருவார் அவர் வந்து நம்மை எல்லா இடையூறுகளிலிருந்தும் அந்நிய இராசாங்கத்தினின்றும் மீட்டு, தங்களுக்குப் புறம்பானவோர் இராச்சியத்தை ஸ்தாபிப்பார் என நல் நம்பிக்கையோடு காத்திருந்தனர். அப்படியே நெடுங்காலங் காத்திருந்தனர். அவர்களுக்குள்ளே ஓர் விசேஷ அரசன் தோன்றினால் அவர் நெடுங்காலமாகத் தாங்கள் காத்திருந்த மேசியாவாயிருக்கலாமோ என நினைத்தனர்.

தாவீது அரசர்க்குரிய எல்லா நலங்களும் மிகப் பொருந்தியவர். ஆதலினாலே அவரை மேசியா ராஜாவுக்கு ஒப்பிட்டனர். தாவீதின் குமாரனாகிய சாலோமோனுடைய இராசாலங்காரமும் மேன்மையும் தாவீதை வெல்லத்தக்கதாயிருந்தது. சாலோமோனை மேசியாவென நினைக்க வந்தது. மேலும் யோசோஷபாத், ஆகாஸ், எசேக்கியா என்னும் அரசர்களையும் அப்படியே நினைத்தனர்.

தீர்க்கதரிசிகளிற்சிலரும் அப்படி எண்ணப்பட்டனர். எலியா, எலிசா, எசேக்கியா, செருபாபேல், அஞ்ஞான விரனாகிய சைறஸ், யூதாமக்கபேயஸ் முதலியோரும் மேசியாவோவென நினைக்கப்பட்டனர்.

ஆனால் மேசியாவானவர் விடுதலை செய்கிறவரும், மீட்பருமாயிருக்கிறபடியால் கடவுள்தான் அப்படிச் செய்ய முடியும் என உணர்ந்தனர். மேலும் தாவீதின் மகிமையான குமாரனும், விடுவிக்கிறவருமாயிருக்கிறதினால், அவர் "கடவுளுடைய குமாரன்" என அழைக்கப்பட்டார். பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் "கடவுளுடைய குமார" னென்னுஞ் சொற்றொடர் பிரயோகிக்கப்படும்போது அது மேசியாவையே குறிக்குமென நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

யூதர்கள் பழைய ஏற்பாட்டிலே மேசியாவைப்பற்றிய தீர்க்கதரிசனங்களையெல்லாம் சொல்லொடு பொருளாய் விளங்கிக்கொண்டு, தாங்கள் காத்திருக்கும் மேசியா ஓர் உலக இராஜனாய், எல்லா இராஜ மகிமைகளும் தத்துவங்களுமுடையராய் வெளிப்பட்டு, அந்நிய இராசாங்கத்தை யழித்து, தேவராச்சியம் (Theocracy) எனப்படுமோர் இராச்சியத்தை ஸ்தாபனஞ் செய்வாரென்றும், அவ்விராச்சியத்திலே தாங்கள் மேலான ஸ்தானங்களையும் பதவிகளையுமடைந்து சமாதானமாய் வாழலாமெனவும் எண்ணிக்கொண்டிருந்தனர். இப்பேர்ப்பட்ட வீண் அபிப்பிராயங்களை யூதர் மனங்களிலேயிருந்து அகற்றும்படி மேசியாவாகிய யேசு எடுத்த பிரயத்தனங்களே யூதருக்கும் யேசுகிறிஸ்துவுக்குமிடையில் மகா வைரமான எதிரிடையை யுண்டாக்கியது.

மேசியாவைப்பற்றிய உயரிய கருத்துகளும் எண்ணங்களுமெல்லாம் சரிவரப் பொருந்தியது யேசுவாகிய கிறிஸ்து (யேசு — மேசியா) விலேயே யென்பதுதான் ஐயந்திரிபற புதிய ஏற்பாட்டின் கொள்கையாயிருக்கக் காணக் கிடக்கின்றது. யேசுகிறிஸ்துவின் முதற் சீஷரிலொருவன் அந்திரேயா தன் அண்ணன் சீமோனைக் கண்டு, "மேசியாவைக்கண்டோம்," என்றான். மேசியா என்பதற்கு கிறிஸ்து என்பது பொருள். பரி. மாற்கு தமது சுவிசேஷத்தின் ஆரம்பத்தில் "தேவனுடைய குமாரனாகிய யேசுகிறிஸ்து" என்னும்போது "மேசியா" என்பது கருத்து. எல்லாவற்றிற்கும் மேலாக, யேசுவானவர் செசரியா பிலிப்பை நாட்டிற் தமது சிஷ்யரைப்பார்த்து: நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள் என விடுத்த உன்னதமான பிரசினத்துக்கு அர்த்தமாக மலேயப்பர் "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்றாரே. "தேவகுமாரன்" என்பது "கிறிஸ்து" (மேசியா) என்பதாம். "யேசுகிறிஸ்து," "கிறிஸ்துயேசு", "கிறிஸ்து", "மேசியா", "கடவுளுடையகுமாரன்" என்பன புதிய ஏற்பாட்டில் மாறி மாறிப் பிரயோசிக்கப்பட்டிருப்பதற்கு நியாய மிதுவே.

## கிறிஸ்துவின் பிறப்பு

யேசுகிறிஸ்து இற்றைக்குக் கிட்டத்தட்ட 2000 வருஷங்களுக்கு முன்னே பிறந்தார். அவர் பிறந்த சிற்றூருக்குப் பெயர் பெத்தலேகேம் என்பது. இன்றைக்கும் பலஸ்தீனா தேசத்துக்குப் போகின்றவர்கள் சுவிசேஷத்திற் சொல்லப்பட்ட சரித்திரங்கள் மறுபடி தங்கள் முன்னிலையில் நடைபெறுவது போன்று ஓர் மானத காட்சிப்புலனையடைவர். அக்காட்சி ஆச்சரியமானதாய் அவர்கள் மனங்களை விட்டகலாது, சிலையிலெழுத்துப்போல் மனங்களிலே நன்றாய்ப் பதிந்துகொள்ளுகின்றது. கிறிஸ்து மார்க்கத்தின் உறுதியான அஸ்திபாரம் அசைக்கப்படக்கூடாததாய் அங்கு நிற்கின்றது. அந்தச் சரித்திர சம்பவம் ஒருவரும் மறுக்கமுடியாச் சம்பவம்.

சமயசம்பந்தமாய்ப் பரிசுத்த பூமியென எண்ணப்படுகின்ற பல இடங்களுண்டு. அவ்விடங்களுக்குச் சென்று அச்சேத்திரங்களைச் சுற்றிப் பார்த்தவர்கள் பலஸ்தீனாவுக்குப் போகிறவர்கள் அடைகிற மனப்பதிவை யடைகிறதேயில்லை.

இன்றைக்கும் நாங்கள் பெய்த் தரிசிக்கக் கூடிய இடத்திலே சீவித்த ஒரு சீவியத்திலேயே கிறிஸ்து சமயம் ஆதாரமாயிருக்கின்றது. கிறிஸ்தவரல்லாத சரித்திராசிரியர்கள் அப்படிச் சீவித்த சீவியத்தைக் குறித்து எழுதியிருக்கின்றனர். திரு ஜான், பிளினி, தாசிற்றஸ், யோசிவஸ் என்போரே மேற்குறித்த இதிகாச கர்த்தாக்கள். பெத்தலேகேமிலே உதித்தவோர் சீவன், மற்றைய சீவன்களை மாற்றிவிட்டது; உலகத்தின் காரியங்களை மாற்றுகிறது; அவரது சின்னக் கரங்கள் நமது சீவியத்திலே கிரியைசெய்யும்படி விட்டுக்கொடுத்தால் எங்கள் சீவியங்களையும் மறுரூபப்படுத்தும். கிறிஸ்த சபை பல பிரிவாயிருப்பதைப் பெரிய காரியமாயெடுத்து விரோதிகள் சபைக்கு மாறாகப் பேசக்கூடும். ஆனால் சபைகள் ஒரே காரியத்தில் ஒத்த மொழியாய்ச் சொல்லக்கூடும். பெத்தலேகேமிலே தோன்றிய ஓர் சீவன் சீவியத்தை நல்லமாதிரியாய்ச் சீவிக்க விரும்புகிற எவனுக்கும் அந்த மாதிரியைக் காட்டுகின்றது. மனுஷர் அப்படிப்பட்ட சீவியத்தைச் சீவிக்க ஆசிக்கின்றனர். ஆனால் அவர்மாத்திரம் அதைச் சீவித்துக் காட்டினார். அந்தச் சீவியத்தைப் பற்றிச் சொலப்பட்டவற்றை ஆராச்சியாளர் நிட்ப நுட்பமாய் ஆராய்ந்திருக்கின்றனர். இந்த ஆராய்ச்சி அச்சீவியத்தைப்பற்றிய சம்பவங்களின் ஐயமுறவுகற்கு இடமில்லாமலாக்குவது மாத்திரமல்ல, ஆராய்ச்சியின் பேறாய் அந்தச் சீவியம் முன்னிலும் பிரபையுள்ளதாய் வந்திருக்கின்றது. நூற்றாண்டாய் வர வர ஆராய்ச்சிசெய்தாலும், அவரது சீவியத்தின் பிரகாசத்தைச் சற்றேனுங் குறைக்காமல், அச்சீவியம் மேலும் அறியப்படுவதாயும், அதிகமாய் நேசிக்கப்படத்தக்கதாயும் வருகின்றது. நாங்கள் தேவபுத்திரராகும்படிக்குத் தேவபுத்திரரான அவர் மனுபுத்திரரானார். கர்த்தராகிய கிறிஸ்துவைப் போற்றுவோம் வாருங்கள்.

பத்திரிகைநேயர் எல்லோருக்கும் நமது நத்தார்ச் சோபன வந்தனங் கூறுகின்றேம்.

## கடிதம்

ஐயா பத்திராதிப,

பாதையோரத்திற் பாட்டைசாரியாயிருப்பதினாற் பாரில் நடப்பதைப் பார்க்க முடியாப் பகற் குருடாகிய அன்னோர்க்கு அமெரிக்க இலங்கை மிஷன் சரித்திராசிரியராம் கனம். C. D வேலுப்பிள்ளைப் போதகாவர்கள் தமது கிரந்தத்தில "தமிழ்ப் பாஷையை யாழ்ப்பாணத்தில் வளர்த்தல்" எனுந் தலையங்கத்தின்கீழ் எழுதியிருப்பது அன்னோரின் அக்ஞானத்தை அகற்றுமென எண்ணி அதைக் கீழே எழுதுகின்றேன்.

"இப் போதனா வித்தியாசாலை நெடுங்காலமாகத் தமிழ்ப் பாஷையை வளர்க்கும் ஸ்தாபனமாய் அமெரிக்க மிஷனினிற் விளங்கிற்று. சுத்த தமிழ்ப் பாஷைப் பயிற்சிக்குரிய விசேஷ இலக்கண இலக்கியங்கள் தாராளமாய்க் கற்பிக்கப்பட்டன. அதனால் இப்பாடசாலையிற் கற்ற மாணவர் பலர் தெள்ளிய அறிவுடையராகிச் செந்தமிழிற் சிறந்த வியாசங்கள் எழுதுந் திறமையுடையவர்களும், பாக்கள் இயற்றும் வன்மை மிகுந்தவர்களுமாய் விளங்கினர். இவ்வகைத் திறமையினாலேயே சிறந்த ஆக்கியோன்மாரயும், புலவர்களாயும், பத்திராதிபர்களாயும், சொற்தாரிஸ்மார்களாயும் வரலாயினர். ஆரம்பகாலத்தில் இப்பாடசாலையின் தலைமையாசிரியராயிருந்த கனம். S. ஜோன் போதகர் (Rev. S John) "இலக்கணச் சல்லாபம்", "யாழ்ப்பாணச் சரித்திரம்", "இலங்கைச் சரித்திரம்" முதலான நூல்களை இயற்றினர். அவருக்குப்பின் தலைமையாசிரியராயிருந்த திரு. S. S. எரேமியாப் புலவர் (Mr. S. S. Jeremiah) பாக்கள், பதங்களாதியவற்றைச் சொற்சுவை பொருட்சுவை செறிய இயற்றுவதில் மிக்க திறமையெய்தி, யாழ்ப்பாணத்திலே அதி பிரசித்தி பெற்றி விளங்கினர். பாடசாலைகளுக்கு வேண்டிய வாசிக புத்தகங்களையும் "பூகோள தர்ப்பணம்" என்னுங் கவிக் கிரந்தத்தையும் இயற்றினவர் இவரேயாம். இவர் பாடிய பாக்களுள் பிரித்தானிய இராச்சியபதியாகிய விக்ரோரியா அரசபெருமாட்டியாரின் ஆளுகைகால யூபிலி மகோற்சவத்திற் பாடிப் பரிமளிக்கும்படி இயற்றிய பாக்கள் மிக விசேஷமானவை. இக்கலாசாலையிற் கல்விகற்ற C. V. சின்னத்தம்பி (Mr. C. V. Sinnathamby) என்பவர் நெடுங்காலம் "பாலியர்நேசன்", "கிறிஸ்தோபகாரி" என்னும் பத்திரங்களுக்கு அதிபராயிருந்து, அவற்றைச் செவ்வனே நடாத்திவந்தார். பிந்திய காலத்திலே இராணிமாணவராய்க் கற்று அரங்கேறினவராம். பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரியிற் கற்றுக் கற்குத்தாச் சருவகலாசாலை B A பட்டம் பெற்று, அக்கல்லூரியிலே கணித ஆசிரியராயிருந்தவருமான திரு. அலின் ஆபிரகாம் (Mr. Allen Abraham, B. A., F R A S) ஆசிரியர் சில வருடங்களாய் உதயதாரகைப் பத்திராதிபராயிருந்து அதனைச் சிறப்பித்து நடத்தினர். பாவியற்றுந் திறமையுடைய பாவினங்கள், சங்கீதங்களைச் செவிக்கினிமை தோன்றப் பாடிப் பரிமளிப்பதிலும் விசேஷ சாதுரியமுடையவராய் இவர் விளங்கினர். பின்னர் சிறிதுகாலம் உதயதாரகைப் பத்திரத்தை மேற்பார்வையிட்டு வந்தவரும், இப்புத்தக ஆக்கியோனும் (Rev. C. D. Veluppillai) இப்பாடசாலை மாணாக்கரேயாகும். யாழ்ப்பாணத்திலே உபாத்தித் தொழிலைத் தற்போது திறமையாய் நடாத்தும் யாவரும் இப்பாடசாலை மாணாக்கராய் மாத்திரமன்றித் தமிழ்ப் பாஷையை அபிவிர்த்திசெய்யும் அநுகூலிகளுமாய் இருக்கின்றனர்."

(அமெரிக்கமிஷன் சரித்திரம் பக். 166, 167)

விஷய ஆராய்ச்சியின்றி எழுந்தபடி பத்திரிகைகளில் எழுதுவது மகா புத்தியீனம். எழுத விடுதலும் புத்தியாகிராது.

பாட்டைசாரி "பாதிரித் தமிழர்" எனும் ஓர் புதிய சாதிப் பிரிவினரைத் தமிழகத்திலே கண்டுபிடித்துவிட்டாராகையால், பத்திரிகை நேயர் எல்லோரும் ஒருங்கு சேர்ந்து, அவ்வெழுத்தாளருக்கு "நோபெல் வெகுமதி (Nobel Prize)" "மனுஷவர்க்க சம்பந்த ஆராய்ச்சி"க்காக அவருக்குக் கிடைக்கத்தக்கதாக முயற்சியெடுக்க வேண்டியது மகா அவசியம்போற் தோன்றுகின்றது.

உண்மைவாதி.

யாழ்ப்பாண மிருகஉணவுச்சாலை
பெரியதெரு – யாழ்ப்பாணம்

திறமான மிருக உணவு வகைகள் குறைந்த விலையில் எம்மிடம் அல்லது எமது விற்பனை ஏஜண்டாகிய யாழ்ப்பாணம் பெரியகடை - காங்கேசன்துறை றோட்டிலிருக்கும் நடன விலாஸ் கம்பனியாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விலை விபரம்

1. அதிக பாலைத் தரும் பசுமாட்டு உணவு 100 இறுத்தல் கூ. 1 ரூபா 21.50.
2. மேற்படி பாலைத் தரும் பசுமாட்டு உணவு 100 இறுத்தல் . ரூபா 19.50.
3. மேற்படி பாலைத் தரும் ஆட்டு உணவு 100 இறுத்தல் ரூபா 21.50.
4. எருது மாட்டு உணவு 100 இறுத்தல் ரூபா 20 50.
5. அதிக முட்டையிடப்பண்ணும் கோழி உணவு 1 இறுத்தல் ரூபா 1.20.
6. கோழிக்குஞ்சுகள் வளர்வதற்கேற்ற தானியம் 5 இறுத்தல் ரூபா 2.00.

42—alt

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Morning Star

Friday, December 14, 1945.

## THE BIRTH OF CHRIST.

The condition of the world after two thousand years of Christ's Birth is not much changed. During these twenty centuries, there have been tremendous and marvellous changes in all directions. Knowledge of men and matters have increased, scientific advancement is at its height, sailing vessels have given place to steamers and land travel to air traffic, the words of mouth to radio, so much so that the whole world has become a real neighbourhood.

But in the spiritual realm the the change is not very marked. There is not much change in the heart of man. Why? When the news of the Birth of Christ was announced to the shepherds and to the magi, they obeyed.

When the Evangelical prophet, Isaiah, foresaw and predicted the messianic age, his prophecy was full of types and symbols, the interpretation of which is spiritual. He speaks of a transfigured menagerie, i. e. "The wolf also shall dwell with the lamb, and the leopard shall lie down with the kid; and the calf and the young lion and the fatling together; and a little child shall lead them..... And the sucking child shall play on the whole of the Asp, and the weaned child shall put his hand on the cockatrice's den." This is a picture of the transformation of the warring forces of society, its antagonisms, rivalries and oppositions by the advent of the Messiah. Christ is changing the world, not by destroying these warring forces in human society and in the human heart but by transforming them.

This transformation takes place first by transforming the contending forces in the soul of man of which St. Paul speaks in the 7th chapter of Romans.

The reason why many a man's heart is not changed is because man has not obeyed. If man obeys, then, He is sure to transform the wild, growling, gnashing menagerie of mankind into the city of God. Many a Christmas has come and gone, but we remain unchanged. Why? We have not obeyed, "A life was begun at Bethlehem which changed other lives and is changing the face of the world, and would change ours if we would let his Baby fingers pull down our stubborn neck as low as His manger and let His loving spirit fill our hearts. A life was begun in Bethlehem which offers to all men the key to the problems of the art of living." Whoever wills may go to Him and get his life transformed. A Merry X'mas to all our Readers.

G. D. T.

### THE PEERLESS CHRIST

But Thee, but Thee, O! Sovereign Seer of time,
But Thee, O Poets' Poet, wisdom's tongue,
But Thee, O man's best MAN, O Love's best Love,
O Perfect Love in perfect labour writ,
O all man's comrade, servant, King or Priest,
What if or yet, what mole, what flaw, what lapse,
What least defect, or shadow of defect,
What rumour tattled by an enemy,
Of influence loose, what lack of Grace,
Over in tortures grasp or sleep's or death's,
Oh what amiss may I forgive in Thee,
JESUS Good Paragon, Thou Crystal CHRIST.

## EL-SHADDAI — GOD THE ENOUGH

*A Message for the New Year*

"The Enough" is not an adequate term, I know. It falls very far short of the facts, that, as a working equivalent of "El-Shaddai," the great ancient Hebrew name for God, I do not think it could be bettered. "The Enough!" God is much more than that, of course. His resources so infinitely exceed our requirements. His sufficiency so immeasurably surpasses every demand that we may make upon it, and yet, is it not marvellously comforting and reassuring to reflect that, however much *more* than enough God is to meet and match our human need. He is certainly enough, nothing *less* than that?

Now, there are many things in the world of which men think they have not enough. One thinks

He has not e n o u g h m o n e y! another that he has not enough power; a third that he has not enough learning, and so on. It is generally assumed that if only it were possible to have a sufficiency of such things, satisfaction would immediately result.

But that is not so. The assumption is false. For the real trouble is, not that people have not enough of these things, but that the things themselves are not enough; and that even if a person could possess everything of that nature that he longs for, he would still be conscious of cravings unfulfilled. Because the plain fact is, that there is ultimately only one way in which the human heart can have enough; only one thing, or, to be more exact, one Being that is enough for man, and that is God!

God is The Enough! We can do without health; we can do without wealth; we can do without education; we can do without social standing; we can do without almost everything, but we cannot do without God. He, and He only is The Enough.

Let us try to think of one or two senses in which that is so.

### 1. God is The Enough in Creation

All around us in this wonderful world we see evidence of His sublime sufficiency, Earth, sea and sky abound with illustration of the fact.

Consider, for example, the *vastness* of the universe. An astronomer tells us that in relation to the myriads of other orbs that people space the way-side planet we inhabit is like a tiny speck of dust in one of the great London railway stations in relation to all the other specks of dust around it, or like a single grain of sand among all the other grains of sand on all the sea-shores of the world. They further state that if the earth were to fall out of its orbit and so spin away into space, it would create no more disturbance in the surrounding ether than the dropping of a pea into the Pacific Ocean!

Such word-pictures, inadequate though they are, do nevertheless assist the mind to form some faint idea of the magnitude of the order of things in which we live. Let a man listen to the Astronomers and ponder what they say and he cannot but experience an expansion in his conception and estimate of God The bigger your world, the bigger your wonder at the creative might of its Maker. In proportion to your vision of the vastness of the universe will be your view of the greatness of the Infinite Mind that planned and fashioned it, and of the Power that brought it into being.

Yes! God is The Enough in creation. The vastness of the universe proclaims it. Conceivably, the world might have been constructed on a lesser scale. There was no absolute need, so far as we can see to build it in so big a way. Why, then, is it so large? Surely it is to shew us that God is gloriously sufficient eternally—the great Enough?

Consider again, the amazing exuberance of *vitality* which confronts us everywhere in the world. Look, for instance, at that stagnant pool. It teems with microscopic life. Or look at that field. It is peppered with sweet and fragrant flowers scattered about in lavish profusion. Or take a walk in the words in autumn. See! The ground is strewn with thousands of seeds and nuts, each capable of reproducing the plant or tree from which it fell. Or take the human population of the globe, the millions of men and women living on the earth.

What do you make of it all? Do you not find, turn where you will, a wondrous prodigality of life, a positive super-abundance of created things? Well, what is it all for? What purpose does it serve? To what does it point? Is it not, once again, to the same impressive truth that God is the Enough in creation?

**2. God is The Enough in Providence.** A modern writer tells how once he asked an old man how he could venture to live alone in a single cottage miles from anywhere. The old man answered cheerfully that he enjoyed [illegible], as he explained, "Providence [illegible] neighbour!" That was how he contrived to live under such seemingly solitary conditions. And indeed, is it not how we all continue to live at all? For is not every one of us God's debtor for everything he is and has? As Isaac Watts has it in his grand old hymn:

Thy providence is kind and large,
Both man and beast Thy bounty share:
The whole creation is Thy charge,
But saints are Thy peculiar care.

Is it not so? The Psalmist says it is. "Thou openest Thy hand," he writes, "and satisfiest the disire of every living thing." Of course, we all know, in a way, that we are utterly dependent upon the benevolence of God. Yet how few of us realise it in any vivid and vital fashion! How few of us ever pause to reflect that we are Pensioners of Providence.

There is one thing that economists are always telling us. It is that the fundamental cause of all the poverty and destitution which exist in human society to day is to be found not in any failure of production, but in a failure in distribution. The food is there, but it is not properly apportioned. Yet how wrong it is to blame God for all this: The fault is in ourselves. It is *we* who are guilty of this gross offence. For God has given us His gracious promises. "While the earth remaineth, seed-time and harvest, and cold and heat, and summer and winter, and day and night shall not cease." So, for centuries, it has proved, and so, as God wills, it will go on. For all our material needs God has furnished an abundant supply. He is the Enough in providence.

### 3. God is The Enough in grace

This is the crest and crown of it all. God is the Enough in creation:—yet! God is the Enough in providence!—certainly! But here in the depths of His unfathomable grace. He is more truly the Enough than ever.

In New York there is an office where big business deals are frequently transacted and on the wall of that office hangs a card bearing this inscription, "We talk abundance here." And when a man begins to speak about the grace of God revealed in Jesus Christ he "talks abundance". In the spacious language of the hymn.

Its streams the whole creation reach,
So plenteous is its store—
Enough for evermore.
God is the Enough in grace.

You need grace to overcome *sin* and there is enough grace for that! God may be said to *love* the angels, but He cannot be said to exercise *grace* towards them. It is sin that Transforms love into Grace, undeserved favour. Truly in a believer's ear grace is "a charming sound!" Smart wonder that when Moody, the evangelist, was meditating on this moving theme, the thought of it so thrilled him that he flung down his pen and ran out into the street, accosting the first man he met with the demand: "Do you know 'grace'?"

"Grace who?" came the surprised rejoinder.

Ay! Grace is a wonderful thing, and there is grace for the vilest, grace for the weekest, grace for the least, the last and the lost, grace to meet and deal with the fact of sin.

(*Selected*).

### MEMORIAL SERVICE

A service in memory of the late Mr. Richard Muttiah Rajasooriar will be held at the Navaly Church on Friday 21st December 1945 at 4 p. m. All friends and relatives are invited to be present.



In
Affectionate Memory
of
**Thayalam**
**Who departed this life**
**17th December 1941**

It seems but yesterday that you
Did in our midst shed forth your love;
How days have sped and years four!
But yet your fragrance lingers on.

(Inserted by her loved ones).
"Old Castle",
Kopay, 12-12-45.



In
Ever-loving Memory
of
**Stella Mangalamany**
**Kunanandham**
**Died Dec. 23rd 1943**

Gone from our home a loved one
Whose smiles and wit is treasured by every one
Short toil eternal rest
God grant unto her everlasting Peace

(Inserted by her sorrowing mother, sisters and brothers)
3rd Cross Street.
Jaffna.


# PREMIER STORES

MAIN ST.

JAFFNA

for

*your*



CHRISTMAS FARE

BON BONS, CRACKERS, DOLLS, FIREWORKS, FLARES, SPARKLERS, TOYS, X'MAS CARDS, CALENDARS, Etc., Etc.

Biscuits
Canned Foods
Chocolates
Cake Ingredients
Cordials
Novelties
Sweets
Toilet Requisites




X'MAS CAKES
CREAM LAYER
YULE LOGS
BRUDHERS.

49—1.


Printed and published for the American Ceylon Mission by Mr. V. Joseph Arianayagam, residing at Tellippalai, at the American Ceylon Mission Press, Tellippalai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org